(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(6).]

# பாராளுமன்றம்

## 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, ஒற்றோபர் 27, வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2011, நவெம்பர் 08, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீடுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதி கல்லூரி (திருத்தம்) — இரண்டாம் மதிப்பீடு.

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச்சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேரத்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விதிக்கப்பட்டு 2011ஓகத்து மாதம் 04 ஆம் திகதிய 1717/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.10.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகன சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 141, 143, 144, 168 மற்றும் 190 ஆம் பிரிவுகளின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 ஓகத்து மாதம் 03 ஆந் திகதிய 1717/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.10.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகன சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 19 மற்றும் 157அ ஆம் பிரிவுகளின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய 1718/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.10.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பாராளுமன்ற சபை முதல்வர்,— 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தொடர்பான குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காலம், 17 தினங்களாக மாத்திரமே அமைவதாலும்,

வரவு செலவுத் திட்ட குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக நாளொன்றுக்கு சுமார் 7 ½ மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, ஒரே தினத்தில் பல்வேறு அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாட நேர்ந்துள்ளதால், அதற்கிணங்க ஒரு செலவுத் தலைப்பிற்காக சுமார் 2 மணித்தியாலங்களே ஒதுக்கப்பட்டுள்ளமையாலும், அதற்கிணங்க ஒவ்வொரு அமைச்சிலும் செலவுத் தலைப்புக்களை தயாரிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் வரையறுக்கப்பட்டுள்ளமையாலும், பாராளுமன்றத்தின் அரசாங்க கட்சியின் முதற்கோலாசான் மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் ஆகியோரின் இணக்கத்தின் பிரகாரம் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்ட இணைப்பில் குறிப்பிடப்பட்ட 21 அமைச்சுக்களினதும் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக, வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தொடர்பான இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் தொடங்கிய தினத்தில் இருந்து, அதாவது 2011.11.22 ஆம் திகதி முதல் 2011.11.29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள்ளே கூடிக் கலந்துரையாடத்தக்க வகையில் தெரிகுழுவொன்று தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், அக்குழுவானது அரசாங்கக்கட்சியிலிருந்தும் எதிர்க்கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

3. அக்குழுவானது

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்,

(ஆ) ஆட்கள், பத்திரங்கள் மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும் யாரேனும் நபரைப் பாராளுமன்றத்திற்கு அல்லது அக்குழுவின் முன் சமுகமளிக்குமாறு உத்தரவிடுவதற்கும் அதிகாரம் உடையதாய் இருத்தல் வேண்டும்.

4. மேற்படி தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்களின் குழுநிலை ஆய்வு ஆரம்பிக்கும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அக்குழு அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**<u>இணைப்பு</u>**

1. நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சு
2. நகர அலுவல்கள் அமைச்சு
3. நுகர்வோர் நலன்புரி அமைச்சு
4. சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சு
5. கிராமிய அலுவல்கள் அமைச்சு
6. தேசிய வளங்கள் அமைச்சு
7. மனித வளங்கள் அமைச்சு
8. சமூக நலன்புரி அமைச்சு

9. விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு
10. உணவுப் பாதுகாப்பு அமைச்சு
11. பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
12. அராசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு
13. வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு
14. தபால் சேவைகள் அமைச்சு
15. மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சு
16. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
17. அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு
18. சமூக சேவைகள் அமைச்சு
19. தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு
20. சிவில் விமான சேவைகள் அமைச்சு
21. தொழல்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2011, நவெம்பர் 11, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.140/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தெங்குக் கமத்தொழில், தெங்கு சார் வளங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தியையும் மேம்பாட்டையும் ஒழுங்கமைத்தல்,— வர்த்தக ரீதியான உற்பத்திகளில் தென்னை முக்கிய இடத்தை வகிப்பதால், வளங்களையும், சுற்றாடலையும் நிலைத்து நிற்கச் செய்கின்ற அதேவேளை, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறிப்பிடக்கூடியளவு பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தில் வளர்ச்சியடையும் அபிவிருத்தியை ஒழுங்கமைத்து தென்னைக் கைத்தொழில் மற்றும் தென்னை சார் வளங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அர்த்த புஷ்டியுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.141/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கித்துள் கைத்தொழிலை மேம்படுத்து முகமாக கித்துள் பயிர்ச்செய்கையை அதிகரித்தல்,— கிராமிய பிரதேசங்களில் கித்துள் பாரியளவு பங்களிப்பை வழங்குவதால், கிராமியக் கைத்தொழிலுக்கும் கிராமிய மக்களுக்கும் ஊக்கமளித்து தாவர உணவிற்காக வளர்க்கப்படும் கித்துள் மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்னும் எமது குறிக்கோள் திட்டத்திற்கு அமைவாக புதிய கித்துள் பயிர்ச்செய்கைகளை அதிகரிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.142/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்தல்,— 2020 ஆம் ஆண்டளவில் ஸ்திரத்தன்மை மிக்க தேசிய அபிவிருத்திக்காகவும் இலங்கை மக்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவற்றின் நலனுக்காகவும் இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.143/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மற்றும் அதனோடு தொடர்புடைய உற்பத்திகளின் பதனிடல், சந்தைப்படுத்தல் மற்றும் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்கான உதவிகளை நல்கி அதன்மூலம் தரமான பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகையை உற்பத்திகளின் முன்னணி ஏற்றுமதி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக இலங்கையை திகழச் செய்வதற்கு உதவக்கூடிய விதத்தில் மரமுந்திரிகைச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.144/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாரம்பரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்,— அம்பாறை மாவட்டத்தில் அருகி வரும் பாரம்பரிய கைத்தொழில்களான கைத்தறித் தொழில், மட்பாண்டம் தயாரித்தல், பனை ஓலை மற்றும் பன்கொண்டு பெட்டி, தண்டு மற்றும் பாய் போன்றவற்றை இழைத்தல், தும்புத் தொழில், பிரம்புத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.146/11

கௌரவ திலங்க சுமதிபால,— ஆயுத விற்பனைக்கான முறைசார்ந்த கட்டுப்பாட்டு முறையொன்றைத் தாபித்தல்,— சர்வதேச ரீதியில் எவ்வித கட்டுப்பாடுமின்றி ஆயுத விற்பனை நடைமுறையிலுள்ளதன் விளைவாக இலங்கை போன்ற நாடுகளுக்கு ஆயுதங்கள் வந்து குவிதல் மற்றும் அவ்வாறான நாடுகளில் இடம்பெறும் முறைசாராத ஆயுதச் சுற்றோட்டமானது சமூகத்தின் சுதந்திரத்திற்கு பாரிய தடையாகவும் சனநாயக ரீதியில் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கத்திற்கு அச்சுறுத்தலாகவும் தாக்கம் ஏற்படுத்துவதாகும், அத்துடன் நாட்டில் போதைப்பொருள் மற்றும் விபச்சாரத் தொழில் போன்ற சட்டவிரோதச் செயல்கள் விரிவடைவதற்கு காரணமாகவும் அமைந்துள்ளது. மேற்படி நிலைமைகளைத் தடுத்து ஒழுக்கம் பேணுகின்ற, சட்டத்தை மதிக்கின்ற, விழுமியங்கள் நிறைந்த சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புதல் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் எதிர்பார்ப்பாக உள்ளதாலும், ஆயுத விற்பனை உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதனூடாக சமூக போராட்டங்களைக் குறைத்து சமூக நலனோம்புகையை உறுதி செய்தல் இன்றைய உலகின் எதிர்பார்ப்பாகவுள்ளதாலும், மேற்குறிப்பிட்ட துர்நடத்தைகளை ஒழிப்பதற்காக சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்களுக்கு ஏற்புடையதாக தேசிய சட்ட முறைமையொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.147/11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பேரிச்சம் பழச் செய்கையை அறிமுகப் படுத்துவற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல்,— மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்ட பீனிக்ஸ் டெக்லிபெரா *(Phoenix dactylifera)* என்ற பேரிச்சம் பழச் செய்கை வெற்றியளித்துள்ளதால், எமது சொந்த மண்ணில் வளர்ந்த நற்சுவைமிக்க இப் பழத்தை சுவைப்பதற்கான வாய்ப்புகள் எமது நாட்டு மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறு இப் பேரிச்சம் பழச் செய்கையை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச் சபை கருதுகிறது.

# திகதி குறிப்பிடப்படாத பிரேரணை முன்னறிவித்தல்கள்

பா.148/11

கௌரவ ஜோன் அமரதுங்க,— 2012 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பரிசீலனை செய்வதற்கான நிலையியற்குழு,— 2012 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் கீழ் 64 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகையை குழு நிலையில் பரிசீலனை செய்யும் பொருட்டு 17 தினங்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையாலும்,

இதற்கிணங்க, ஒவ்வொரு அமைச்சினதும் செலவுத் தலைப்புகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள காலம் வரையறுக்கப்பட்டுள்ளதாலும்,

வரவு செலவுத் திட்ட குழுநிலையில் நாளொன்றுக்கு சுமார் 7 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, இதன்படி பெருமளவு அமைச்சுகளின் செலவுத் தலைப்புகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு அண்ணளவாக 2 மணித்தியாலங்கள் ஒதுக்கப்படுதல் எவ்விதத்திலும் அந்தந்த அமைச்சுகளின் செயலாற்றுகையையும் எதிர்வரும் வருடத்துக்கான ஒவ்வொரு அமைச்சினதும் முன்மொழிவுகளையும் ஆராய்வதற்காக இக்காலம் போதியதாயில்லாமையினாலும், இப் பிரேரணைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள 21 அமைச்சுகளினதும், 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை பரிசீலனை செய்யும் பொருட்டு தெரிகுழுவொன்றின் வடிவத்தில் பாராளுமன்றப் பிரேரணையொன்றின் மூலம் நிலையியற் குழுவொன்று தாபிக்கப்படல் வேண்டுமெனப் பிரேரிக்கின்ற அதேவேளை,

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 2012 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டுக்கான விவாதம் மீதான வாக்கெடுப்பு நடைபெறும் திகதி வரையிலான காலத்தினுள் கூடி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைக் கலந்துரையாடத்தக்க வகையில் ஆளுங்கட்சியிலிருந்தும் எதிர்க் கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 21 பேரைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமெனப் பிரேரிக்கின்றேன்.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படல் வேண்டும்.

   (ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், அக்குழுவானது இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது,

   (அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்,

   (ஆ) குழுவின் முன்னிலையில் தோற்றுமாறு எவரேனுமொருவரை அழைப்பதற்கும், ஏதேனும் பத்திரங்கள் அல்லது அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு எவரேனுமொருவருக்கு கட்டளையிடுவதற்கும், குழுவின் முன்னிலையில் அல்லது பாராளுமன்றத்தின் முன்னிலையில் தோற்றுமாறு எவரேனுமொருவருக்குக் கட்டளையிடுவதற்கும், அத்தகைய நபரின் கட்டுப்பாட்டிலுள்ள அல்லது அவர் வசமுள்ள ஏதேனுமொரு பத்திரத்தை, புத்தகப் பதிவேட்டை அல்லது வேறேதேனும் ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடுவதற்கும்,

(இ) குழுவின் தவிசாளரால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அதிகாரளிக்கப்பட்ட நபரொருவரால் செய்துவைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சி கூறும் சாட்சிகளை வாய்மொழிமூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறு வகையில் உறுதிப்படுத்துவதற்கும்,

(ஈ) குழுவுக்கு உதவ உரிய துறைகளிலிருந்தான நிபுணர்களினதும் வல்லுனர்களினதும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்,

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பிக்கவும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கும்,

அதிகாரம் உடையதாய் இருத்தல் வேண்டும்.

4. மேற்படி 21 அமைச்சுக்களினதும் மதிப்பீடுகள் வரவு - செலவுத்திட்ட குழுநிலைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள தினத்திற்கு 05 தினங்களுக்கு முன்னர் இந்நிலையியற் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**<u>இணைப்பு</u>**

1. நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சு
2. நகர அலுவல்கள் அமைச்சு
3. நுகர்வோர் நலன்புரி அமைச்சு
4. சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சு
5. கிராமிய அலுவல்கள் அமைச்சு
6. தேசிய வளங்கள் அமைச்சு
7. மனித வளங்கள் அமைச்சு
8. சமூக நலன்புரி அமைச்சு
9. விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு
10. உணவுப் பாதுகாப்பு அமைச்சு
11. பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
12. அராசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு
13. வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு
14. தபால் சேவைகள் அமைச்சு
15. மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சு
16. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
17. அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு
18. சமூக சேவைகள் அமைச்சு
19. தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு
20. சிவில் விமான சேவைகள் அமைச்சு
21. தொழல்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு

கௌரவ மைத்திரிப்பால சிறிசேன

கௌரவ நிர்மல கொத்தலாவல

கௌரவ முஹமட் அஸ்லம்

கௌரவ இந்திக்க பண்டாரநாயக்க

கௌரவ டபிள்யு. பீ. ஏக்கநாயக்க

கௌரவ ஏ.ஆர்.எம். அப்துல் காதர்

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ றுவன் ரணதுங்க

கௌரவ தராநாத் பஸ்நாயக்க

கௌரவ விநாயகமூர்த்தி முரளீதரன்

கௌரவ பழனி திகம்பரம்

கௌரவ சரண குணவர்தன

கௌரவ ஜகத் பாலசூரிய

கௌரவ ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

கௌரவ துலிப் விஜேசேகர

கௌரவ வை.ஜீ. பத்மசிறி

கௌரவ சஜித் த வாஸ் குணவர்தன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ மனுஷ நாணயக்கார

கௌரவ பவித்ரா தேவி வன்னியாராச்சி

கௌரவ உதித் லொகுபண்டார

கௌரவ நிமல் விஜேசிங்க

கௌரவ ஏ.எச்.எம். பௌசி

கௌரவ எச்.எம்.எம். ஹரிஸ்

கௌரவ லக்ஷ்மன் வசந்த பெரேரா

கௌரவ அசல ஜாகொடகே

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ நிஷாந்த முத்துஹெட்டிகமகே

கௌரவ (டாக்டர்) ரோஹண புஷ்பகுமார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ டீ. ரஞ்சித் த சொய்சா

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ லசந்த அழகியவன்ன

கௌரவ சரத் குமார குணரத்ன

கௌரவ திஸ்ஸ கரலியத்த

கௌரவ ஹேமால் குணசேகர

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ கனக ஹேரத்

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ ரொஷான் ரணசிங்க

கௌரவ கீதாஞ்சன குணவர்தன

கௌரவ ரெஜினோல்ட் குரே

கௌரவ வீ. எஸ். ராதாகிருஷ்ணன்

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ விக்டர் அன்ரனி

கௌரவ கமலா ரணதுங்க

கௌரவ சிறிபால கம்லத்

கௌரவ எச்.ஆர். மித்ரபால

கௌரவ ரோஹண திஸாநாயக்க

கௌரவ உபேக்ஷா சுவர்ணமாலி

கௌரவ மாலனி பொன்சேகா

கௌரவ ஜானக்க வக்கும்புர

கௌரவ விஜித பேருகொட

கௌரவ காமினி லொகுகே

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ பியசேன கமகே

கௌரவ குமார வெல்கம

கௌரவ காமினி விஜித் விஜிதமுணி த சொய்சா

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ ரிசாட் பதியுதீன்

கௌரவ ஜே.ஆர்.பீ. சூரியப் பெரும

கௌரவ டபிள்யு.டீ.ஜே. செனவிரத்ன

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த

கௌரவ ரஊப் ஹக்கீம்

கௌரவ மில்ரோய் பர்னாந்து

கௌரவ (கலாநிதி) மேர்வின் சில்வா

கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா

கௌரவ ஏ.எம். சாமிக புத்ததாச

கௌரவ பீலிக்ஸ் பெரேரா

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ எம்.பீ. பாறூக்

கௌரவ நந்திமித்ர ஏக்கநாயக்க,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் முன்னாள் பிரதம நீதியரசர் மாண்புமிகு சரத் என் சில்வாவுக்கு எதிராக அதிகாரத் துஷ்ப்பிரயோகம் பற்றியும், துர்நடத்தை மற்றும்/அல்லது ஒழுக்கக்கேடு பற்றியும் விசாரித்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

மேற்படி குற்றச்சாட்டுகளுக்கிணங்க அவர் நீதிமன்றத்தை அபகீர்த்திக்கு உள்ளாக்கி யுள்ளாரெனக் குறிப்பிடப்பட்டுள்ளதாலும்,

நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் சட்டத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாப்பதிலும் பேணிவருவதிலும் அவர் தவறியுள்ளாரென்பதாலும்,

பின்வரும் விடயங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

(அ) வெல்லவாய, முன்னாள் நீதிவான் திரு. ஜனக பண்டாரவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்கள் மற்றும் அவரது இராஜினாமாவை சமர்ப்பிக்க அவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதா என்பதும்;

(ஆ) கொழும்பு, முன்னாள் மேலதிக நீதவான் திரு. ஹிரான் ஏக்கநாயக்கவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை வன்மமாக இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(இ) முன்னாள், நீதவான் திரு. சுனில் லோரன்ஸ் த கொஸ்தாவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்

(ஈ) மாத்தறை, முன்னாள் மேலதிக மாவட்ட நீதவான் திரு. அனுர பண்டாரவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(உ) மாளிகாகந்த, முன்னாள் நீதவான் திரு. டி.எம். சிறிவர்தனவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஊ) நீர்கொழும்பு, முன்னாள் மேலதிக மாவட்ட நீதவான் திரு. டி.எம். சிறிவர்தனவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(எ) நுவரெலியா, முன்னாள் மாவட்ட நீதவான் திரு. பிரபாத் த சில்வாவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஏ) கெப்பித்திகொல்லேவ, முன்னாள் நீதவான் திரு. டி.எம்.ரி.பீ. திசாநாயக்கவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஐ) கொழும்பு, முன்னாள் மேலதிக மாவட்ட நீதவான் திரு. ஹெரல்ட் விஜேசிறி லியனகேயின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஒ) மொறவக்க, முன்னாள் நீதவான் திரு. கே.டி.கே. த ஆப்றூவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஓ) பலப்பிட்டிய, முன்னாள் நீதவான் திரு. வை.எல். தர்மசேனவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஔ) கண்டி, முன்னாள் மேலதிக நீதவான் திரு. நந்தன வீரசிங்கவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(க) கந்தளாய், முன்னாள் நீதவான் திரு. ஏ.எம்.டி.எஸ். திக்கபிட்டியவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ங) எல்பிட்டிய, முன்னாள் மாவட்ட நீதவான் திரு. ஜீ.டி. குலதிலகவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ச) மேலே குறிப்பிட்ட தருணங்களுக்கு மேலதிகமாக நீதிச் சேவை அலுவலர்களின் சேவைகள் வன்மமான முறையில் முடிவுறுத்தப்பட்ட தருணங்கள்;

(ஞ) கொழும்பு 7, விஜேவர்தன மாவத்தை, 129 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பிரதம நீதியரசர் உத்தியோகபூர்வ இல்லத்தில் பேணிவரப்பட்ட நீதியரசர்களின் நிறுவனத்தின் பொறுப்பாளர் எனும் வகையில் நீதிமன்றத்தின் முன்னிலையில் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த ரோஹணகுமார என்பவருக்கு மாண்புமிகு சரத் என். சில்வாவினால் நியமனமொன்று வழங்கப்பட்டதா என்பதும்;

(ட) மாண்புமிகு சரத் என். சில்வா கௌரவ பணிப்பாளரொருவராக சேவையாற்றுகின்ற பௌத்த ஒலிபரப்புச் சேவையை தாபிக்க ஏதுவான விடயங்கள் மற்றும் த புடிஸ்ற் (The Buddhist TV Channel) தொலைக்காட்சி அலைவரிசையை ஆரம்பிக்க 65 மில்லியன் ரூபா கொடையினை வழங்கிய முகுந்தன் கானகீ மனுதாரராக தோற்றிய சி.பீ.என். செய்மதி (C.B.N. Sat) வழக்கின் தீர்ப்புடன் சம்பந்தப்பட்ட விடயங்கள்;

(ண) பாராளுமன்றத்தை நவீனமயமாக்கல், சனநாயகம் மற்றும் அபிவிருத்தி பற்றிய உலக வங்கி / ஐ.நா. அ. வே. (World Bank / UNDP) உதவிக் கருத்திட்டத்தில் மாண்புமிகு சரத் என். சில்வாவினால் ஈடேற்றப்பட்ட கடமைகளுடன் தொடர்புடைய விடயங்கள்;

(த) பிரதம நீதியரசர் எனும் வகையில் மாண்புமிகு சரத் என். சில்வா சேவையாற்றிய காலப்பகுதிக்குள்ளே அவரது வன்மமான செயல்கள் காரணமாக வேறு ஆட்கள் எவருக்கேனும் இடர்கள் ஏற்பட்டுள்ளதா என்பதும்;

2\. (அ) இக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஆ) 95 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழு முப்பத்தொன்றுக்கு (31) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது, —

(அ) அதன் நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) தனது குழுவின் முன் தேன்றும்படி எவரேனும் நபரை அழைப்பதற்கும், ஏதேனுமோர் பத்திரத்தை அல்லது அறிக்கையை வரவழைப்பதற்கும், பாராளுமன்றத்தில் அல்லது தனது குழுவின் முன் தோன்றுமாறு கட்டளையிடுவதற்கும் அத்தகைய நபரின் பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் பதிவேட்டினை, புத்தகத்தை, அறிக்கையை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கும்;

(இ) சாட்சியாளர்களை வாய்மூலமாக விசாரிப்பதனூடாக திட்பநுட்பத் தன்மையை விசாரித்தறியவும் அல்லது வேறுவிதமாக உறுதிசெய்து கொள்ளவும் குழுவின் தவிசாளர் அல்லது அப்பணிக்கென விசேடமாக தத்துவமளிக்கப்பட்ட ஒருவரால் சத்தியம் செய்யப்பட்ட சாட்சியாளர்களை விசாரணை செய்வதற்கும்;

(ஈ) குழுவின் உதவிக்கென உரிய துறைகளின் சிறப்பறிவுள்ள நபர்களின் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்,

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் பராளுமன்ற ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்லவும்

அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.